IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# அறநூல்கள் வெளிப்படுத்தும் கற்றோரின் கடமைகள்

நெறியாளர்
முனைவர். பி.கந்தசாமி, M.A.,M.Phil., Ph.D.,
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை,
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி,
நாமக்கல் - 637002

ஆய்வாளர்
து.கலைச்செல்வி
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்)
தமிழ்த்துறை,
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி,
நாமக்கல் - 637002

**முன்னுரை**

மனிதனின் உள்ளார்ந்த மன ஆற்றல்களை அறிவுத் திறன்களை மலர்வித்து வெளிக்கொணர்தற்கும் அவற்றை வாழ்க்கைக்குப் பயன்படுமாறு செய்வித்ததற்கும் உதவியாக அமையும் முயற்சி கல்வி ஆகும். அது தம்மால் அமையுங்கால் கற்றல் என்றும் பிறர் உதவியால் அமையும்போது கற்பித்தல் என்றும் கூறப்படுகிறது. அவ்வாறு கற்ற கல்வியைத் தவறான வழியில் செல்லவிடாமல், தனக்கான பொறுப்பையும், கடமையையும் உணர்ந்து செயல்பட வேண்டும். கற்றல் வழி நடத்தலே கற்றோரின் கடமை என்று அறநூல் கூறுகின்றது. அவ்வாறு கற்றோரின் கடமையை விளக்குவது இவ்வாய்வாகும்.

**படிக்கும் வகை**

கற்றோர் காத்திட வேண்டிய கடமைகள் நான்கு எனவும் அந்நான்கு கடமைகளையும் காத்திடும் வகையினையையும் ஆசாரக் கோவை கூறுகிறது.

> **“தக்கணை வேள்வி தவம்கல்வி யிந்நான்கும்**
>
> **முப்பா லொழுக்கினாற் காத்துய்க்க - உய்க்காக்கால்**
>
> **எப்பாலு மாகா கெடும்”[1]** **ஆசாரக்கோவை பா.3**

ஆசிரியர்க்குக் காணிக்கை தருதலும், யாகம் செய்தலும், தவம் செய்தலும், கல்வியும் ஆகிய இந்த நான்கையும் மனம், மொழி, மெய் ஆகிய மூன்றாலும் மாறுபடாமல் ஒழுகும்படி காத்து செலுத்தி வரவேண்டும். அங்ஙனம் இல்லாது மாறுபட்டால் எவ்வுலகிலும் தனக்குப் பயன் ஆகாமல் இந்த நான்கும் கெட்டு விடும் எனக் கூறப்பட்டுள்ளது. காணிக்கை தருதல் என்பது பொருளாதாரத்தோடு தொடர்புடையது. தவம் செய்தல் என்பது அமைதியாக மனத்தினை அடக்கி அமர்வதாகும். யாகம் செய்வதில் மந்திரங்கள் ஓதப்படும். ஓதும் மந்திரத்தினை நன்கு மனதில் பதிய வைத்திருக்க வேண்டும். ஆகவே யாகம் கல்வியோடு தொடர்பு உடையதாக உள்ளது. காணிக்கை செலுத்துதல் என்பதும் கற்றுத்தரும் ஆசிரியருக்கு வழங்கப்படுகிறது. ஆகவே, அதுவும் கல்வியோடு தொடர்புடையதாகவும், கல்வியை வளர்ப்பதற்கும் பயன்படுகிறது. போர்ப்பயிற்சி செய்தல், இலக்கணம் கற்றல், இலக்கியம் பயிலுதல், பிறமொழி அறிதல், மந்திரம் படித்தல் எனக் கல்வியும் பலவகைப்படுகிறது. இக்கல்வியை எத்துறை சார்ந்து ஒருவர் படிப்பினும் அத்துறையில் தன்னை முகமனத்தோடு ஈடுபடுத்தி ஆழ்ந்து கற்றிட வேண்டும்.

மனம் என்பது சிந்தனைக் களன். மனிதர்கள் மனதில் எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டே இருக்கின்றனர். பெரும்பாலும் தங்கள் மனதினைப் பாதித்தவை பற்றியும், அவற்றிலிருந்து விடுபடல் அல்லது அவற்றை வெல்லுதல் பற்றி சிந்திக்கப்படுகின்றன. தங்களுக்கு ஏற்பட்ட அவமானங்கள் பற்றி மனம் வருந்தி சிந்திக்கிறது. இழப்புகள் அல்லது பெறப்போகும் பேறுகள் பற்றி சிந்திக்கிறது. நடைமுறையில் உள்ள உலகினை மறந்து கற்பனையான உலகில் வாழ்வதை எண்ணி மனம் மகிழ்ச்சியினைத் தருகிறது. இம்மாதிரியான சிந்தனைகளில் பெரும்பாலானவை பயனற்றவையாக உள்ளன. இச்சிந்தனைப் போக்கினை ஒழுங்கமைத்து எப்பொழுதும் தாம் கற்ற கல்விப் பாடங்களை மனதில் சிந்திக்க வேண்டும். மனத்துள்

சிந்திப்பது, பேசுவதை மற்றவரிடம் மொழிய வேண்டும். வீணான, பயனற்ற நிகழ்வுகளை வேடிக்கையான செய்திகளைப் பேசி காலம் கழித்தல் கூடாது. சிந்திப்பதும், பேசுவதும் கற்ற கல்விப் பொருளாக இருக்க வேண்டும். சிந்தனை, பேச்சு, இவைகளோடு தொடர்புடையதாகவும், இவற்றை செயல்படுத்துவதாகவும் செய்கை அமைய வேண்டும். செய்கை என்பது உடலால் செய்யப்படுவது. மனதில் எண்ணுகின்ற கல்விப் பொருளை எழுதுதல், மற்றவருக்குக் கற்பித்தல் போன்ற செய்கைகளால் கற்றவை மறந்து போகாது, நினைவில் தக்க வைக்கப்படுகிறது.

**படிக்கும் முறை**

ஒரு நூலினைக் கற்பது என்பது தான் அந்நூலின் பொருளை அறிவதாகும். தான் அறிந்த பொருளை மற்றவர்க்குத் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும். மற்றவரிடம் கருத்தினைக் கூறுகையில் ஏற்படும் தடுமாற்றம், அத்தடுமாற்றத்தினை வென்று கற்பதில் தேர்ச்சி பெறுதல் ஆகிய வழிமுறைகளை பழமொழி நானூறு,

**“சொற்றொறும் சோர்வு படுதலால் சோர்வின்றிச்**

**கற்றொறும் கல்லாதேன் என்று வழியிரங்கி**

**உற்றொன்று சிந்தித்து உழன்று ஒன்(று) அறியுமேல்**

**கற்றொறுந்தான் கல்லாத வாறு”[2]**

**பழமொழி நானூறு பா.3 ப.77**

தம்மினும் கல்வியுடையார் முன்னர்ச் சென்று சொல்லும் பொழுதெல்லாம், சொல்வதிலே தளர்ச்சியானது தோன்றலாம். அதனால், சோர்வு அடையவே கூடாது. புதிதாக ஒன்றைக் கற்குந்தோறும், தான் கல்லாதவன் என்று கருதி, அதனைக் கற்கும் வழியினை நினைத்து இரங்கி மனம் ஒருமைப்பட அது ஒன்றையே சிந்தித்து, வருந்தியாயினும் அந்த ஒன்றை அறிய முற்பட வேண்டும். இப்படியாவதனால், புதிதாக ஒவ்வொன்றையும் கற்குந்தோறும், தான் அதனை முன்னர்க் கல்லாத நன்மையே தோன்றும் என்க எனக் கூறப்பட்டுள்ளது. கற்பவர்க்கு ஆறுதல் அளித்து மனத்தைத் தேற்றும் வகையில் பாடலில் கருத்து கூறப்பட்டுள்ளது. படித்து அறிந்ததை மற்றவரிடம் கூறுகையில் ஏற்படும் சொல் தளர்ச்சி கண்டு அவமானம் அடையக் கூடாது. மீண்டும் தான் கற்ற நூலினை இதற்கு முன்னர் கற்கவில்லை; இப்போதுதான் புதிதாகக் கற்கிறோம் என்ற மனநிலையில் கற்க அறிவுறுத்தப்படுகிறது. எற்கனவே படித்த நூல்தானே என அலட்சியப்படுத்தாமல் கற்றிட வேண்டும். இவ்வாறு மறுபடியும் பலமுறை கற்கையில் நூல் கூறிடும் பொருளை அறிகையில் அது புதுமையாகத் தோன்றும். ஆகவே ஒரு நூலினை கற்று முடித்து விட்டோம் என்ற திருப்தியினை அடையாது, திரும்பத் திரும்ப நூலினைக் கற்று அதிலிருந்து புதிய பொருளினை அறிய வேண்டும்.

**காதலும் கல்வியும்**

ஒரு நூலினைத் திரும்பத் திரும்ப படிப்பதால், முன்பு படிக்கையில் விளங்காத, அறியாத, உணராத பொருள் புதிதாகத் தெரிய வருவதை வள்ளுவர் அவர்கள் ஒரு பெண்ணுடன் கிடைக்கும் புணர்ச்சி இன்பத்துடன் ஒப்பிட்டு விளக்குகிறார்.

**“அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்**

**செறிதோறும் சேயிழை மாட்டு”[3] (குறள். 1110)**

நூல்களாலும் நுண் அறிவாலும் அறிய அறிய முன்னைய நம் அறியாமை தெரிவது போல, நல்ல அணிகளை அணிந்திருக்கும் தன் மனைவியுடன் கூடக் கூட அவள் மீது உள்ள காதற்சுவையும் புதிது புதிதாத் தெரிகிறது என பரிமேலழகர் பொருள் விளக்கம் கூறுகிறார். தனது காதலியை மணமுடித்த பின்னர் அவளைப் புணர்ந்து இன்பம் கண்டு மகிழ்ந்த தலைவன் தனக்குத் தானே கூறிக்கொண்ட முறையில் மேற்கண்ட குறளில் கருத்து கூறப்பட்டுள்ளது. பெண்ணைப் புணர்ந்து பெறுகின்ற இன்பம் ஒரே தன்மையுடன் நில்லாது ஒவ்வொரு முறையும் புதிதான அனுபவம் கொடுக்கிறது. முன்பு கண்ட இன்பம் போலன்றி இல்லாது முன்பு தான் கண்டுணராத புதிய உணர்வுடன் கூடியதாக உள்ளது. இது போல் ஏற்கனவே படித்து அறிந்த நூலினை புதிதாகக் கற்கையில் முன்பு உணராத புதிய உண்மைகள் புலனாகிறது. பெண்ணும் புத்தகமும் முன்பு அறிமுகமானவை, பெண்ணிடம் கிடைக்கும் இன்பம் புதிது புதிதாக இருப்பது போல் புத்தகத்தினைப் படிக்கையில் புதிதான அறிவுத் தெளிவு கிடைக்கிறது. பெண் மீது எவ்வாறு குறையாத அன்பும் மிகுதியான ஆர்வமும் கொண்டிருக்கிறோமோ, அது போன்று புத்தகத்தின் மீதும் சலிப்படையாது ஆர்வத்துடன் பற்று கொண்டு படித்திட வேண்டும். ஒருமுறைப் படித்தால் அறியாமை

நீங்காது, திரும்பத் திரும்பப் படிப்பதன் வழியே அறியாமை அகலும். ஆகவே, ஒரு புத்தகத்தை படித்து முடித்து விட்டோம் என்ற மனதிருப்தி கொள்ளாது, மீண்டும் படிக்க வேண்டும்; படித்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்பது குறள் கூறும் கருத்தாகும்.

**நுண்பொருள் அறிதல்**

கணவன் ஒருவனை மணமுடித்து இல்லற வாழ்வு மேற்கொள்ளாது, பணத்தினைப் பெற்று, மற்ற ஆடவர்களுடன் கூடி இன்பம் வழங்கும் பெண்களை பொது மகளிர், வேசி, காசி, பரத்தையர் என அழைப்பது பண்டைய தமிழ் மரபாகும். இத்தகைய பெண்களை உருவாக்கியது அக்காலச் சமுதாயமாகும். அதே வேலை இப்பெண்கள் மீது கடுமையான குற்றச்சாட்டினையும் சமுதாயம் சுமத்தியது. இப்பெண்களை **‘பொருட் பெண்டிர்’** என்றும் **“இருமனப் பெண்டிர்”**[4] என்றும் வள்ளுவர் குறிப்பிடுகிறார். இத்தகைய பெண்களை,

**“வெம்புவான் விழுவாள் பொய்யே**

**மேல்விழுந் தழுவாள் பொய்யே**

**தம்பலம் தின்பாள் பொய்யே**

**சாகிறேன் என்பாள் பொய்யே**

**அம்பினும் கொடிய கண்ணாள்**

**ஆயிரம் சிந்தை யாளை**

**நம்பின பேர்கள் எல்லாம்**

**நாயினும் கடையா வாரே”**[5]

வேசிப் பெண்ணொருத்தியின் பொய்யான செய்கையைக் குறிப்பிட்டு அத்தகைய பெண்ணை நம்பாதே, அவள் மீது அன்பு கொள்ளாதே என ஆண் ஒருவனுக்கு அறிவுறுத்தும் வகையில் பாடலில் கருத்து கூறப்பட்டுள்ளது. வெம்புதல், விழுதல், ஆண்மீது விழுந்து அழுதல், ஆண் தின்ற வெற்றிலைபாக்கினை தான் வாங்கி மெல்லுதல், ஆண் சாவதையறிந்து உயிர் வாழாது அவனுடன் சாவேன் எனக் கூறல் போன்ற அவளது செய்கைகள் யாவும் பொய்யாக உள்ளது. அம்பினும் கொடிய கண்களையுடைய அப்பெண்ணின் உள்ளத்தில் ஆயிரம் சிந்தனையுள்ளது. ஆகவே அவள் எத்தகையவள் என அறிய இயலாது. அவள் பழகும்போது அன்பினைப் பலவழிகளில் வெளிப்படுத்துவாள். ஆனால் அவையாவும் அவளது உண்மை இயல்பன்று. வெளிப்படுத்தும் அன்புக்கு மாறான பண்புகளை அவள் கொண்டிருக்கிறாள். இவ்வாறு புரிந்து கொள்ள இயலாத பொதுமகளிரின் பண்பினைப் போன்றதே புத்தகமும் ஆகும் என நாலடியார்,

**“பெறுவது கொள்பவர் தோள்போல் நெறிபட்டுக்**

**கற்பவர்க் கெல்லாம் எளியநூல் ; மற்றும்**

**முறிபுரை மேனியர் உள்ளம்போன் றியார்க்கும்**

**அறிதற் கரிய பொருள்”**[6]

கொடுப்பவரை மனத்துடன் கொள்ளாமல் தாம் பெறுகின்ற விலைப்பொருளையே கருத்தாகக் கொள்ளும் பொது மகளிரின் தோள்கள் பலர்க்கும் எளியவாதல் போல ஒரு தொடர்பற்றுக் கற்பவரெல்லார்க்கும் நூல்களின் பொதுக் கருத்துக்கள் எளியனவாய் விளங்கும். ஆனால், மாந்தளிர் போன்ற மேனியையுடைய அவ்விலை மகளிரின் மனம் யார்க்கும் அறிதல் அருமையாதல் போல, நூலின் உட்பொருள்கள் எல்லார்க்கும் அறிதற் கரியனவாகும் என்பதாகும். ஒரு நூலில் பொதுக் கருத்து, உட்பொருள் என இரண்டு வகையான பொருள்கள் உள்ளன. பொதுக் கருத்து மேலோட்டமாக உள்ளது. உட்பொருளோ மறைபொருளாக புதைந்து உள்ளது. பணம் உள்ளவர்க்கு எளிதாக வசப்படும் பொது மகளிரின் உடல் போல், நூலின் பொதுக்கருத்து அந்நூலினைப் படிக்கையில் வெளிப்பட தெரிய வருகிறது. ஆனால் உட்பொருளோ அவ்விலை மகளிரின் அறிய இயலாத உள்மனம் போல் உள்ளது. ஆகவே பொதுக் கருத்தினை அறிந்த நிலையில் அந்நூலினைக் கற்றோம் என்ற திருப்தி அடையக் கூடாது. அந்நூலில் புதைந்திருக்கும் உள் பொருளை அறிய ஆழ்ந்து கற்றிடல் வேண்டும் என்பது பாடலின் உட்பொருளாகும்.

**கற்றது மறவாமை**

படிக்க வேண்டிய நூல்கள் நிறைய உள்ளன. அறிந்து கொள்ள வேண்டிய பாடங்களும் பல உள்ளன. இச்சூழலில் விரைவாகப் படிப்பது வழக்கமாக உள்ளது. அவ்வாறு விரைவாகப் படிக்கையில் என்ன வேகத்தில் படிக்கிறோமோ அதே வேகத்தில் மறந்து விடுவதும் வழக்கமாக உள்ளது. படித்தவை மறந்து போகின்ற நிலையில் நூலினைப் படித்த செயல் மட்டும் நினைவில் நிற்க, படித்த கருத்துக்கள் எதுவும் நினைவிற்கு வருவதில்லை. படித்ததை மறவாது நினைவில் வைத்திருக்க வேண்டுமென்பதை குமரகுருபரர் அவர்கள்,

**'வருந்தித் தாம்கற்றனை ஓம்பாது மற்றும்**

**பரிந்துசில கற்பான் தொடங்கல் - கருந்தனம்**

**கைத்தலத்த உய்த்துச் சொரிந்திட்டு அரிப்பு அரித்து ஆங்கு**

**எய்த்துப் பொருள் செய்திடல்'**[7]

ஒருவன் பலவிடத்தும் சென்று முயன்று கற்ற கல்வியைப் பேணாது, மறந்துவிடக் கூடாது. இதனை மறந்து விட்டு வேறுநூல்களை மீண்டும் முயன்று கற்கத் தொடங்குவது கையில் உள்ள செல்வத்தை (இழந்துவிட்டு) சிதறிவிட்டு, மீண்டும் ஒவ்வொன்றாய்ப் பொறுக்குவதற்குச் சமமாகும் என்பதாகும். ஏற்கனவே படித்ததை மறக்கக்கூடாது. படித்ததை நன்கு நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். மறந்து போகாது நினைவில் நிறுத்த படித்ததை மீண்டும் படித்து நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு படித்ததை நினைவுபடுத்தாது, புதிதாகப் படிக்கத் தொடங்கினால், ஏற்கனவே படித்தது நினைவினை விட்டு அகன்றிடும் வேளையில் மீண்டும் படிக்க வேண்டியிருக்கும். ஏற்கனவே படித்து அறிந்த பாடம் கையிலுள்ள பணம் போன்றது. படித்ததை மறந்துவிட்டு மறுபடியும் படித்து நினைவுபடுத்த முயல்வது கையிலுள்ள காசினை கீழே சிதறிவிட்டு அவற்றை பொறுக்கி மீண்டும் கைவசப்படுத்துவதாகும். இதனால் காலம் விரயமாகும். அதனால் கற்றவற்றை நினைவில் வைக்க வேண்டுமென்பதை முதுமொழிக் காஞ்சி,

**"மேதையிற் சிறந்தன்று கற்றது மறவாமை"**[8]

எனக் கூறுகிறது. அறிவு நுட்பத்தை விட கற்ற பொருளை மறவாதிருத்தல் மேலானது ஆகும். ஒருவர் தானாகப் புதிதாக ஒன்றினை அறிகிறார். மதி நுட்பத்தாலும் ஆய்ந்து அறிவினை அறிகிறார். இவ்விரண்டினையும் விட முன்பு தான் கற்றதை மறவாதிருக்க வேண்டும். ஒருவர் ஒரு பாடத்தில் நன்கு புலமை மிக்கவர் என்பதற்குச் சான்றாக விளங்குவதே அவர் படித்த பாடத்தை மறவாது கூறுவதில் உள்ளது. படித்த பாடத்தினை மனத்தில் நன்கு பதிய வைத்துக் கொள்ள வேண்டும். தக்க சமயத்தில் அதனைக் கையில் தான் படித்த கருத்துக்களோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும், பழைய கருத்திற்கும், புதிதாகக் கற்ற கருத்திற்கும் உள்ள முரண்பாடுகள், இணக்கங்களை ஆராய்ந்திட வேண்டும். ஆகவே அறிவினைப் பெறுவதற்கு மட்டுமின்றி, அவிறினை வளர்த்துக் கொள்வதற்கும், பெற்ற அறிவினை தெளிவாக ஐயமற விளக்குவதற்கும் கற்ற கல்வியை மறவாதிருத்தல் இன்றியமையாததாக இருக்கிறது.

**முடிவுரை**

உலகில் தோன்றிய ஒருவொருவருக்கும் ஒரு கடமையானது உள்ளது. அதுபோல் கற்றோருக்கு என்று சில கடமைகள் உள்ளன. ஒருவர் சிறந்த நூல்களை கற்றால் மட்டும் போதாது. கற்றதன் வழி செயல்படும் போதுதான் உண்மையான கல்வி என்ன என்பது புலப்படும். சிறந்த நூல்களை கற்பதும் அதன்வழி நடப்பதுமே கற்றோரின் சிறந்த கடமை என்பதை உணர்த்தும் விதமாக இவ்வாய்வானது அமைந்துள்ளது.

**தொகுப்புரை**

- தனக்கும் பிறருக்கும் பயன்படும் வகையில் கற்ற கல்வியினை மறவாது இருக்க வேண்டும். மறந்தால் கற்றது வீணாகிவிடும்.
- பெண் மீது கொண்ட அன்பினால் பெற்றிடும் இன்பம் புதிது புதிதாகத் தோன்றுவது போல் நூலினை திரும்பத் திரும்ப படிக்கையில் புதிய புதிய பொருளானது விளங்கி அறியாமை அகலும்.
- நூலைப் படிக்கும்போது அந்நூலில் புதைந்திருக்கும் உள் பொருளை அறிய ஆழ்ந்து கற்றுதல் வேண்டும்.
- ஒருவன் பல இடத்தில் சென்று முயன்று கற்ற கல்வியைப் பேணாது மறந்து விடக்கூடாது.

**சான்றெண் விளக்கம்**

1. ஆசாரக்கோவை பா.எண்-3
2. பழமொழி நானூறு பா.எண்-3 ப.77
3. குறள் எண் - 1110 ப.386
4. குறள் எண் - 397 ப.150
5. விவேக சிந்தாமணி ப.19
6. நாலடியார் ப.254
7. நீதிகளஞ்சியம் ப.61
8. முதுமொழிக்காஞ்சி ப.1362

**பார்வை நூல்கள்**


1. திருவள்ளுவர் - திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும்

2. வரதராசன்.மு - திருவள்ளுவர் அல்லது வாழக்கை விளக்கம்
பாரிநிலையம், சென்னை
மறுபதிப்பு – 2019.

3. தமிழ்ப்பிரியன் - ஆசாரக்கோவை,
நான்மணிக்கடிகை (மூலமும் உரையும்)
கற்பகம் புத்தகாலயம் - சென்னை
முதற்பதிப்பு – டிசம்பர் 2007

4. புலியூர்க்கேசிகன் - பழமொழி நானூறு
ஸ்ரீ செண்பகா பதிப்பகம் - சென்னை
முதற்பதிப்பு – 2010

5. பத்மதேவன் (உரையாசிரியர்) - விவேகசிந்தாமணி
கற்பகம் புத்தகாலயம் - சென்னை
இரண்டாம் பதிப்பு – டிசம்பர் - 2008